**நிலச்சரிவு அனர்த்த பாதுகாப்பு செயற்திட்டம் - 2021**

நிலச்சரிவு அனர்த்த பாதுகாப்பு செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல்-பி 109 ஆம் இலக்க கடன் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னாள் துறைமுகங்கள், மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் உயர் நிலப்பகுதிகளில் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் அடிப்படை உட்கட்டமைப்பாக தேசிய வீதிகளை இலக்காகக்கொண்டு மண்சரிவு இடரை குறைப்பதற்கும் அதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு பங்களித்து வீதி வலையமைப்பின் பாதுகாப்பினை முன்னேற்றி வீதிப் பாவனையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களை உள்ளடக்கிய மக்களின் வாழக்கையை பாதுகாத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 16,201.2 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 122.6 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா. 12,870.45 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 97.4 மில்லியனை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,331 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2013 யூலை 05 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2020 யூலை 05 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்குப் ஆரம்பத்தில் பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி மேலும் இரண்டு ஆண்டுகளிற்கு நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் இரண்டாம் (02) பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கங்களை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு | தொகை ரூபா. மில். | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | ரூபா 130.4 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 12 வாகனங்கள் மற்றும் கடுகன்னாவவில் ரூபா 198.8 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட செயற்பாட்டு கட்டிடம் என்பன 2020 யூன் மாதத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 329.2 | நடைமுறை வேலை அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இணங்கப்பட்டதுடன் இது 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் மூலதனமாக்கப்படும். | மேற்குறிப்பிட்ட சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 05 இன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை பொது திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட சமப்படுத்தல் சீராக்கங்கள் 2021 திசெம்பர் 31 வரை நிதிகூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 1,353 | வெளிநாட்டுக் கடன் தொகை நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுதல். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

இந்த செயற்திட்டம் யு மற்றும் டீ என இரண்டு பொதிகளைக் கொண்டிருந்தது, பொதி யு இல் 10 தளங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 06 தளங்கள் பொதி டீ இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. கடன் 2020 யூலை 05 இல் மூடப்பட்டதால் 2021 சனவரி 01 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த மிகுதி பணிகள் புமுளுடு நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு 2021 திசெம்பர் 31 அளவில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த அறிக்கைத் திகதி வரை முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.